# கிராமிய சேவைத் திட்டம்

ஈரோடு மண்டலம்
சத்தியமங்கலம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
தொட்டம்பாளையம் கிராமம்




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

- நோயற்ற வாழ்வு
- கல்வியில் மேன்மை
- சுற்றுப்புற சுகாதாரம்
- முதியோரைப் பாதுகாத்தல்
- மகளிர் மேம்பாடு
- குடும்ப அமைதி
- கர்மயோக வாழ்க்கைநெறி
- மனிதநேயம்
- மதநல்லிணக்கம்
- சமுதாய விழிப்புணர்வு

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# ஈரோடு மண்டலம்
# சத்தியமங்கலம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# தொட்டம்பாளையம் கிராமம்

## Contents

1. செயல்பாட்டு அறிக்கை ........ 3

2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம் ........ 4

3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும் ........ 4

4. தொட்டம்பாளையம் கிராமத்தின் தொடக்கவிழா ........ 5

5. மருத்துவ முகாம் ........ 7

6. மனநல ஆலோசனை முகாம் ........ 7

7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் ........ 7

8. ஆரோக்கிய மேம்பாட்டு முகாம் (மது ஒழிப்பு முகாம்) ........ 8

9. மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி ........ 8

10. பிரம்மஞானம் & ஆசிரியர் பயிற்சி ........ 9

11. மனைவிநல வேட்பு தினம் ........ 9

12. சர்வதேச யோகாதினம் ........ 9

13. முதல் நிலை அகத்தாய்வு ........ 10

14. இரண்டாம் நிலை அகத்தாய்வு ........ 10

15. மூன்றாம் நிலை அகத்தாய்வு ........ 10

16. அனுபவ உரை Result Inference ........ 11

17. எதிர்காலத் திட்டங்கள்: ........ 17

18. வாழ்த்து: ........ 17

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | தொட்டம்பாளையம் | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | **20-05-2025** | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | **09-11-2025** | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | **5** மாதங்கள் | | |
| 5. | மண்டலம் | ஈரோடு | | |
| 6. | அறக்கட்டளை | சத்தியமங்கலம் | | |
| 7. | நிதி உதவி வழங்கியவர் | *Bannari Rural Foundation* | | |
| 8. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | ஆண்:120 | பெண்:180 | மொ:300 |
| 9. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | ஆண்:115 | பெண்:225 | மொ:340 |
| 10. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | ஆண்:115 | பெண்:225 | மொ:340 |
| 11. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | ஆண்:115 | பெண்:225 | மொ:340 |
| 12. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:37 | பெண்:116 | மொ:153 |
| 13. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:35 | பெண்:105 | மொ:140 |
| 14. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:30 | பெண்:95 | மொ:125 |
| 15. | பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:13 | பெண்:34 | மொ:47 |
| 16. | ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:05 | பெண்:10 | மொ:15 |
| 17. | உடற்பயிற்சி பயின்றவர்கள் *(Students below 14)* | ஆண்:20 | பெண்:26 | மொ:46 |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களால் **369**-வது கிராமமாக தொட்டம்பாளையம் கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் 20-05-2025-ஆம் தேதியிலிருந்து **09-11-2025**-ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. தொட்டம்பாளையம் கிராமத்தின் தொடக்கவிழா

*Bannari Rural Foundation* நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஈரோடு மண்டலம், சத்தியமங்கலம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை சார்பாக 20-05-2025- தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.** மயிலானந்தன் அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும் தொட்டம்பாளையம் கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.















<u>உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி</u>











## 5. மருத்துவ முகாம்

*25.06.2025 அன்று தொட்டம்பாளையம் கிராமத்தில் VSP Medical Team மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-08, பெண்கள்-23, மொத்தம்-31 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*




## 6. மனநல ஆலோசனை முகாம்

**25.08.2025** *அன்று Dr.Ramesh அவர்களால் தொட்டம்பாளையம் கிராமத்தில் மன நல ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் ஆண்கள்-10, பெண்கள்-67, மொத்தம்-77 பேர் கலந்துகொண்டனர். தனிநபர் ஆலோசனை 27 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*




## 7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

*28.06.2025 அன்று தொட்டம்பாளையம் கிராமத்தில் மண்டலம் அறக்கட்டளை பொறுப்பாளர்கள் மற்றும் கிராம பொருப்பாளர்களால் கிராம மக்களுக்கு 135 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.*




## 8. ஆரோக்கிய மேம்பாட்டு முகாம் (மது ஒழிப்பு முகாம்)

*25.10.2025 அன்று தொட்டம்பாளையம் கிராமத்தில் முது ஒழிப்பு விழிப்புணர்வு முகாம் Mr.Jagadeesan and AAA Counsellors அவர்களால் சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் கிராம மக்கள் மொத்தம் 50 நபர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.*





## 9. மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி

*தொட்டம்பாளையம் கிராமத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி துவக்கவங்கப்பட்டது. இலவச தையல் பயிற்சி மூலமாக 30 கிராமப் பெண்கள் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர்.*









## 10. பிரம்மஞானம் & ஆசிரியர் பயிற்சி






## 11. மனைவிநல வேட்பு தினம்





## 12. சர்வதேச யோகாதினம்





13. முதல் நிலை அகத்தாய்வு





14. இரண்டாம் நிலை அகத்தாய்வு





15. மூன்றாம் நிலை அகத்தாய்வு






## 16. அனுபவ உரை **Result Inference**

| S.No. | Inference |
|---|---|
| 1 | Around 99% of the Women participants are satisfied with their tailoring skills developed. |
| 2 | Around 96% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 3 | 95% of the participants are able to control their anger |
| 4 | 95% of the students able to focus on studies and other activities (School/College) |
| 5 | 94% of the participants are satisfied with their children education and attitude |
| 6 | Around 93% of the participants of the people now keep the village cleaner than before |
| 7 | 90% of the participants are out of the depression compared to before joining the program |
| 8 | 83% (220) of the participants have made progress in family peace |
| 9 | Due to SKY Exercises and meditation-310 participants cured of Joint Pain, 120 participants cured of Migraine and headache, 105 participants cured of Blood pressure, 62 cured of sugar problem, 31 participants cured of Asthma and Breathing Problem, 15 women participants cured of Menstrual Problem (PCOD). |
| 10 | **98% of the participants are happy with the VSP Programme compared to only 30% before joining the program** |

## Feedback Trend



ஓம்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

S.விஜயகாந்தன்
8/268, தேவாங்கபுரம்
தொட்டம்பாளையம் (Po)
பவானிசாகர் (via)-638451
ஈரோடு (Dt)



என்னுடைய பெயர் S.விஜயகாந்தன். தொட்டம்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு கால் மரத்து போனது. மற்றும் வயிறு அதிகமாக உப்புசம் போன்ற உடல் உபாதைகள் இருந்து வந்தது.

இந்த சமயத்தில் நான் எங்கள் கிராமத்திற்கு உலக சமுதாய சேவா சங்கம், பண்ணாரி சுகர் பவுண்டேஷன் இணைந்து கிராம சேவை திட்டம் கொண்டு வந்தார்கள். இந்த திட்டத்தில் நானும் சேர்ந்து ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்த பயிற்சிகளை செய்து வந்தேன். மிகவும் குறுகிய காலத்திலேயே சிறிது சிறிதாக உடல் ஆரோக்கியமடைவதை உணர முடிந்தது. காய கல்ப பயிற்சியும், தியானமும் தொடர்ந்து செய்து வந்தேன். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி பெருகியது. மனம் மிகவும் அமைதியாக உள்ளது. அகத்தாய்வு பயிற்சிகள் மூலம் கோபம் குறைந்து மனதிற்கு நிறைவு ஏற்பட்டுள்ளது. இவ்வளவு நன்மைகளை நாம் அடைய மனவளக்கலையை உலகிற்கு வழங்கிய ஆசான் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கு கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். தொட்டம்பாளையம் கிராம சேவை திட்டத்திற்கு நிதி வழங்கிய பண்ணாரி சுகர் பவுண்டேஷன் அவர்களுக்கு நன்றி, அவர்களின் இப்பணி மேலும் சிறக்க என்னுடைய வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
S.விஜயகாந்தன்

வாழ்க வையகம் குருவாழ்க குருவே துணை வாழ்க வளமுடன்

ஆ. சரிதா
8/178 தேவாங்கபுரம்
தொட்டம்பாளையம் (P.O)
தொட்டம்பாளையம்



என்னுடைய பெயர் ஆ. சரிதா தொட்டம்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு உடல், மனம் ரீதியாக சில பிரச்சினைகள் இருந்தது. மன உளைச்சல், மன அழுத்தம் அதிக கோபம், தூக்கமின்மை. உடல்சோர்வு ஆகியவற்றால் மிகவும் துன்பப்பட்டு வந்தேன்.

இந்த சமயத்தில் தான் எங்கள் கிராமத்திற்கு உலக சமுதாய சேவா சங்கம் பண்ணாரிஅம்மன் சுகர் பவுண்டேசன் இணைந்து கிராமிய சேவைத்திட்டம் கொண்டு வந்தார்கள். இத்திட்டத்தில் நானும் ஆரம்பம் முதலே சேர்ந்து ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்த பயிற்சிகளை செய்து வந்தேன். மிகவும் குறுகிய காலத்தில் சிறிது சிறிதாக உடல் மற்றும் மனதளவில் மாற்றங்களை உணர்ந்தேன். காயகல்ப பயிற்சியும், தியானமும் தொடர்ந்து செய்து வந்தேன். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி பெருகியது. மன அழுத்தம். கோபம் குறைந்துள்ளது. இதனை அகத்தாய்வு பயிற்சி மூலம் ஏற்பட்டுள்ளது. வாழ்க்கையில் மகிழ்ச்சி, அமைதி, இறைநிலை அடைதல் போன்ற நன்மை தரக்கூடிய மனவளக்கலையை உலகிற்கு வழங்கிய ஆசான் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கு கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். தொட்டம்பாளையம் கிராமிய சேவைத்திட்டத்திற்கு நிதிவழங்கிய பண்ணாரி அம்மன் சுகர்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.

K. கார்த்திகா.
8/179. தேவாங்கபுரம்
தொட்டம்பாளையம்
சத்தியமங்கலம் வட்டம்
ஈரோடு மாவட்டம் - 638451



நான் தொட்டம்பாளையம் கிராமத்தில் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன் நான் மன வேதனையால் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டு இருந்தேன். எங்கள் ஊரில் உலக சமுதாய சேவா சங்கம் - கிராமிய சேவை திட்டம் மூலமாக மன வளக்கலை யோகா பயிற்சியை தொடங்கினார்கள். இப்பயிற்சியில் நான் சேர்ந்த பின்பு தவம் செய்வதினால் எனது மனமும் உடற்பயிற்சியினால் என் உயிரும் உடலும் மிகவும் ஆரோக்கியமாக உள்ளது. என் கோபம் குறைந்து. இப்பொழுது பொறுமையாக பேசுகிறேன். மேலும் அகத்தாய்வு பயிற்சியும் எனக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இந்த பயிற்சியை எங்கள் ஊருக்கு கொண்டு வந்தவர்களுக்கும் ஆசிரியருக்கும் யோகா பயிற்சிக்கு இட மளித்தவர்களுக்கும் மற்றும் வேதாத்திரி மகரிஷி. அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்

குரு

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

P. ரகுநாதன்
10/88 பங்களா மேடு
தொட்டம் பாளையம்.



என்னுடைய பெயர் P. ரகுநாதன். தொட்டம்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு முழங்கால் வலி இருந்தது மற்றும் மன அமைதி இல்லாமல் துன்பப்பட்டு வந்தேன். இந்த சமயத்தில் எங்கள் ஊருக்கு உலக சமுதாய சேவா சங்கம் பண்ணாரி அம்மன் சுகர் பவுண்டேசன் இணைந்து கிராமிய சேவைத் திட்டம் கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டத்தில் நான் ஆரம்பம் முதலே சேர்ந்து ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்த பயிற்சிகளை செய்து வந்தேன். பதினைந்து நாட்களிலேயே முழங்கால் வலி குறைந்தது. உடல் ஆரோக்கியம் அடைவதை உணர முடிந்தது. காயகல்ப பயிற்சியும் தியானமும் தொடர்ந்து செய்து வந்தேன். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதை உணர முடிந்தது. மூன்று நிலை அகத்தாய்வுகளில் எடுத்த பயிற்சியின் காரணமாக மனம் அமைதி பெறுவதையும் உணர முடிந்தது. இவ்வளவு நன்மைகளை தரக்கூடிய மனவளக்கலையை உலகிற்கு வழங்கிய ஆசான் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கு எனது கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். தொட்டம்பாளையம் கிராமிய சேவை திட்டத்திற்கு நிதி வழங்கிய பண்ணாரி அம்மன் சுகர் பவுண்டேசன் நிறுவனத்திற்கு நன்றி.

இப்படிக்கு

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



B. பண்ணாரி
8/178 தேவாங்கபுரம்
தொட்டம்பாளையம் (P.O)
தொட்டம்பாளையம்

என்னுடைய பெயர் B. பண்ணாரி தொட்டம்பாளையத்தில் வசித்து வருகிறேன். எனக்கு உடல் உபாதைகள் இருந்தது. மூட்டுவலி, இடுப்பு வலி, மன உளைச்சல், உடல் சோர்வு ஆகிய வற்றால் மிகவும் துன்பப்பட்டு வந்தேன்.

இந்த சமயத்தில் தான் எங்கள் கிராமத்திற்கு உலக சமுதாய சேவா சங்கம் பண்ணாரி அம்மன் சுகர் பவுண்டேசன் இணைந்து கிராமிய சேவைத்திட்டம் கொண்டு வந்தார்கள். இந்த திட்டத்தில் நானும் ஆரம்பம் முதலே சேர்ந்து ஆசிரியர்கள் கற்றுக்கொடுத்த பயிற்சிகளை செய்து வந்தேன். மிகவும் குறுகிய காலத்தில் சிறிது சிறிதாக மாற்றங்களை உடலில் அறிந்தேன். காயகல்ப பயிற்சி, தியானம், அகத்தாய்வு பயிற்சி. மூலம் நோய் எதிர்ப்பு சக்தி, மன அமைதி, வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ கற்றுக் கொண்டேன். இவ்வளவு நன்மைகளை தருகின்ற மனவளக்கலை இவ்வுலகிற்கு தந்த ஆசான் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கு கோடான கோடி நன்றியை சமர்பிக்கிறேன். தொட்டம்பாளையம் கிராமிய சேவைத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கிய பண்ணாரி அம்மன் சுகர் பவுண்டேசன் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

## 17. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க தொட்டம்பாளையம் கிராமம், சத்தியமங்கலம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

## 18. வாழ்த்து:

தொட்டம்பாளையம் கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி *Bannari Rural Foundation* நிறுவனத்திற்கும் இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த ஈரோடு மண்டல பொறுப்பாளர்களுக்கும், சத்தியமங்கலம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் *Asst.Prof.K.Balasubramaniyam & Asst.Prof.B.Ezhil* அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய *VSP* நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை
உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.
உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே
உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.

-வேதாத்திரி மகரிஷி

தொண்டாற்றி இன்பம் காண்போம்! நன்றி, வாழ்க வளமுடன்!

குருவின் சேவையில்
*WCSC-VSP* இயக்குனரகம்
அறிவுத்திருக்கோயில், ஆழியார்